# பாடம் 1: பயணத்திற்கான அறிமுகம்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**
அடிப்படை நிலை (7 வயது) : அனைத்து கருத்துகளையும் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (10 வயது) : அனைத்து கருத்துகளையும் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (13 வயது) : அனைத்து கருத்துகளையும் கற்பிக்கவும்

கத்தோலிக்க விசுவாசத்தைக் கற்கின்ற பயணம் துணிகரமான ஒன்றாகும். இது ஓர் அழகியத் தொடக்கம், ஒரு சோகம், ஓர் உச்சக்கட்டம், ஒரு வெற்றிகரமான முடிவைக் கொண்ட ஒரு நீண்ட கதையைத் தொடர்வது போன்றது. இந்த அமர்வின் நோக்கம் உங்கள் துணிகரப் பயணம் குறித்த ஒரு சுருக்கமான விவரிப்பை உங்களுக்கு வழங்குவதாகும்.
இந்த பயணக் காலத்தில், நீங்கள் பின்வருகிறவற்றைக் கற்பீர்கள்:

**… கடவுள் பற்றி (பாடங்கள் 2 முதல் 6)**
கடவுள் உண்மையிலேயே இருக்கிறார் என்பதை நாம் எப்படி உறுதியாக அறிய முடியும், மேலும் அவர் எப்படி தம்மை நமக்கு வெளிப்படுத்தினார் என்பவற்றை நீங்கள் கண்டறிவீர்கள். கிறிஸ்தவர்களாக நாம் கடவுளின் வார்த்தையில் இருந்து அவரைக் குறித்த ஆழ்ந்த புரிதலை பெறுவதற்கு குறிப்பிட்ட வழிகள் உள்ளன. (வானதூதர்களின்) காணப்படுகிற உலகையும் (பிரபஞ்சத்தில் நாம் பார்க்கின்ற) காணப்படாத உலகையும் கடவுள் படைத்த பொழுது என்ன நிகழ்ந்தது என்பதையும் நீங்கள் கண்டறிவீர்கள். சாத்தான் மற்றும் அலகைகள், மற்றும் தீமை ஆகியவை எப்படி வந்தன என்பவையும் நீங்கள் கற்பவற்றின் ஒரு பகுதியாக இருக்கும்.

**… மனிதகுலம் பற்றி (பாடம் 7)**
சாத்தானால் ஏமாற்றப்பட்ட பிறகு மனிதகுலம் எப்படி வீழ்ந்தது, மேலும் அனைத்து மனிதர்கள் மீதும் அந்த வீழ்ச்சியின் விளைவுகள் என்ன என்பதை நீங்கள் கண்டறிவீர்கள்.

**… கடவுளின் மீட்புச் செயல் பற்றி (பாடங்கள் 8 முதல் 19)**
நமது வீழ்ச்சிநிலை மற்றும் நமது பாவத்திலும் மனிதர்களை கடவுள் கைவிட மறுத்தது எப்படி, மனிதர்கள் மற்றும் படைப்பு முழுவதையும் மீட்கும் தமது திட்டத்தைச் செயல்படுத்த மனிதகுலத் தலைமுறைகள் அனைத்திலும் அவர் வெவ்வேறு மனிதர்களைப் பயன்படுத்தியது எப்படி என்பவற்றை நீங்கள் கண்டறிவீர்கள். இது அனைத்திற்கும் காரணம் அவரது மாபெரும் அன்பே. கடவுள் தாம் தேர்ந்தெடுத்த மக்களை வழிநடத்த நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, தாவீது போன்ற மனிதர்களையும், மேலும் மற்ற பல்வேறு இறைவாக்கினர்களையும் பயன்படுத்தினார்.

**… கடவுள் மனிதரானது பற்றி (பாடங்கள் 20 முதல் 24)**
கடவுளின் மீட்புத் திட்டத்தில் மிகவும் முக்கியத் தருணமாக அவர் தாமே மனிதகுலத்தின் நடுவே மனிதராக வாழ வந்ததை நீங்கள் கண்டறிவீர்கள். கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்து, நம் நடுவே வந்து குடிகொண்டதால் கடவுளின் ஆட்சியின் கீழ் வாழ்வது எப்படி என்று அவரால் நமக்கு கற்பிக்க முடிந்தது. அவர் வந்து, மனிதர்களின் பாவங்களுக்காகத் தம்மையே பலியாக்கியதால் கடவுளின் அன்பின் முழுமையை அவர் நமக்கு காட்டினார், அதனால் கடவுளுடன் நமது நட்புறவைப் புதுப்பிக்கும் சாத்தியத்தை உருவாக்கினார்.

**… திருச்சபை பற்றி (பாடங்கள் 25 முதல் 44)**
தூய கத்தோலிக்கத் திருச்சபை என்றால் என்ன, இயேசு கிறிஸ்துவுடனான அவளது உறவின் இயல்பு என்ன என்பவற்றை நீங்கள் கண்டறிவீர்கள். கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்வு, இறப்பு மற்றும் உயிர்ப்பின் மறைபொருள்களை நினைவுகூரும் ஒரு திருவழிபாட்டு ஆண்டில் வேறுபட்ட பருவங்களைக் கடக்கும் திருச்சபை, அதில் கிறிஸ்துவின் உடலின் உறுப்புகளான புனிதர்கள் அனைவரையும் நினைவுகூர்கிறது. இயேசு தமது திருச்சபையை அன்பு செய்கிறார், மேலும் அவளுக்குத் தொடர்ந்து வாழ்வை வழங்குகிறார்.

**… செபம் மற்றும் ஒன்றிப்பு பற்றி (பாடங்கள் 45 முதல் 51)**
திருச்சபையோடு செபிப்பதன் வழியாக கத்தோலிக்கத் தனிநபர் எப்படி கடவுளோடு தொடர்பு கொள்கிறார் என்பதை நீங்கள் கண்டறிவீர்கள். திருச்சபையுடன் நாம் கொண்டுள்ள உறவு

புனிதர்களிடம் இருந்து நாம் பெறுகின்ற ஆன்மிக ஆதரவையும் உள்ளடக்கியது, அவர்களில் உயர்ந்தவர் பேறுநிறை கன்னி மரியா.

**… கிறிஸ்தவ வாழ்வு பற்றி (பாடங்கள் 52 முதல் 63)**

பின்னர், நீங்கள் படிவம் நான்கில் இருக்கிற பொழுது, ஒரு கத்தோலிக்கராக இருப்பது எப்படி அதாவது வாழ்விற்கான இறைநிலையின் குறிப்பிட்டப் படித்தரங்களை நீங்கள் கண்டறிவீர்கள். நமது வாழ்வில் கடவுளுக்கு மாண்பளிக்க, கத்தோலிக்கர்கள் கடைபிடிக்க வேண்டிய சில அறநெறி விதிமுறைகளைப் பற்றி நீங்கள் கற்பீர்கள். கத்தோலிக்க விசுவாசத்தை மக்களுக்கு அறிமுகம் செய்வது எப்படி என்றும் நீங்கள் கற்பீர்கள், அதனால் நற்செய்தியின் அழைப்புக்கு அவர்களும் பதிலிறுக்க முடியும்.